# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.22/2023</u>

2025-ம் ஆண்டு ஜுன் திங்கள் 24-ஆம் நாள் செவ்வாய்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | யுவராஜ் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை**</u>:

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.12.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**</u>:

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம்அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் போய் போலிசில் தகவல் சொல்லவில்லை. விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. இறந்து போனவர் என் நண்பர் என்றால் சரியல்ல. இன்று சாட்சியம்அளிக்க 1ம் மனுதாரர் எனக்கு தகவல் சொன்னார். விபத்து சம்மந்தமாக 1ம் மனுதாரருக்கு நான் தான் தகவல் சொன்னேன். எனக்கு மோட்டார் சைக்கிள் ஓட்ட தெரியும். பொதுவாக மோட்டார் சைக்கிளின் லைட் வெளிச்சம் சுமார் 20, 30 மீட்டர் தூரம் வரை தெரியும். Yamaha FZ-S வாகனம் பற்றி எனக்கு தெரியும். அது வேகமாக செல்லக்கூடிய பெரிய வாகனம்

என்றால் சரிதான். எனக்கு முன்னால் சென்ற வாகனங்கள் கடந்த செல்வதை பார்த்தேன். லாரி மேம்பாலத்தில் இறங்கும்போது விபத்து நடந்தது. விபத்து நடந்த இடம் மேம்பாலத்தை தாண்டிய பகுதியாகும். மற்றவர்களை போன்று இறந்தவரும் கவனித்து சென்று இருந்தால் விபத்து நடந்திருக்காது என்று சொன்னால் சரியல்ல. லாரியின் இடது புறம் மோதி விபத்து நடந்ததா என்றால் லாரியின் பின்புறம் மோதியதில் விபத்து நடந்தது. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் வேகத்தடை உள்ள விவரம் எனக்கு தெரியும். நான் விபத்தை பார்க்கவில்லை என்றும், மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதராவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அந்த இடத்தில் இருந்திருந்தால் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.